<u>**DEPOSITION OF WITNESS**</u>

---

**MCOP. No. 1510/2024** **DATE:02.12.2025**

Deposition of Witness : R.W.1

Name : Mr. Narasimman

Father/Husband Name : Mr. K.N.Chellappa

Age :

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 2nd day of December 2025.

-----------------------------------------------------------------------------------------------

<u>**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**</u>

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் இரண்டாம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிகிறேன். நான் புலனாய்வு விசாணை அறிக்கையினை தாக்கல் செய்யவில்லை. நாங்கள் நியமனம் செய்த புலன்விசாரணை அதிகாரியின் அறிக்கையின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் அவரது அறிக்கையின் அடிப்படையிலும், கோப்பின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். நான் முதல் மனுதாரரை பார்த்து நேரடியாக விசாரணை ஏதும் நடத்தவில்லை. எங்கள் புலன்விசாரணை அதிகாரி சென்று விசாரணை செய்தது நேரடியாக எனக்கு தெரியாது. முதல் மனுதாரர் GST செலுத்தினார் என்பதை காட்ட ஆவணம் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை. எமசாஆ 2 ஆனது புலன்விசாரணை அறிக்கை கிடையாது என்றால் அது அறிக்கையில் ஒரு பகுதியாகும். ஏற்கனவே விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்த பின்னர் மறுபடியும்

பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கை எமசாஆ 2 ஆகும். 12.07.2024 அன்று புலன்விசாரணை அறிக்கை பெறப்பட்டது என்று எமசாஆ 2ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எமசாஆ 2 ஆனது 18.11.2025 தேதியிட்டது ஆகும். 12.07.2024 அறிக்கையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எமசாஆ 2 ல் முதல் மனுதாரர் தொழில் செய்யும் இடத்தை போட்டோ எடுத்து Screenshot ஆக தாக்கல் செய்துள்ளேன். எமசாஆ 3 அவ்வாறான Screenshot என்றால் GST வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது ஆகும். முதல் மனுதாரர் தான் அந்த நிறுவனத்தை நடத்தி வருகிராறா என்பது குறித்து வருமான வரி அலுவகத்தில் கடிதம் கொடுத்து பதில் எதுவும் பெற்றுள்ளேனா என்றால் அவ்வாறு எதுவும் கடிதம் கொடுக்கவில்லை. முதல் மனுதாரர் தன் பெயரில் பெயர்மாற்றம் செய்து அந்த நிறுவனத்தை வேறு நபருக்கு விற்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. முதல் மனுதாரர் அவரது கணவர் நடத்திவந்த தொழிலில் அனுபவம் இல்லாததாலும், குடும்பத்தலைவியாக இருந்ததாலும் மற்றவருக்கு விற்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:02.12.2025.

NAZIR AHAMED Digitally signed by NAZIR AHAMED

தலைமை நீதிபதி,

சிறுவழக்குகள் நீதிமன்றம்.